இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 10-06-2025



# தி.மு.க.வில் இணைவீர்!





மண், மொழி, மானம் காத்திட திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைவீர் என்ற மாபெரும் முன்னெடுப்பைத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னெடுத்துள்ளார்கள்!

**“எல்லாருக்கும் எல்லாம் எனும் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதால் ஒவ்வொரு வீட்டிலும் ஒருவராவது ஏதேனும் ஒரு திட்டத்தில் பயனாளியாக உள்ளனர். இத்தகைய நலத்திட்டங்களும், மாநிலத்தின் வளர்ச்சியும், தொடர்ந்திடவும், மாநில உரிமைக்கான போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுக்கவும் - நமது மண், மொழி, மானம் காத்திடவும் - தமிழ்நாட்டின் அனைத்து குடும்பங்களும் ஒரு குடையின் கீழ் ஒன்றாய் இணைந்து வருகின்ற சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது. துளியும் சமரசமின்றி நெஞ்சுரத்தோடு தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்திடும் பொருட்டு ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கையை கழகம் முன்னெடுக்க வேண்டும்”** என்று மதுரைப் பொதுக்குழுவில் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் பலத்த கைதட்டலுடன் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தி.மு.க.வில் புதிய உறுப்பினர் சேர்க்கையைத் தொடங்குவதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு குடையின் கீழ் தமிழ்நாட்டு மக்களை ஒன்றிணைக்க வேண்டிய அவசியமும் தேவையும் இப்போது அதிகமாக இருக்கிறது.

1967 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நடைபெற்ற சென்னை விருகம்பாக்கம் மாநாட்டில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது உரையில் இப்படிக் குறிப்பிட்டார்கள்:

**“அமைச்சரவையில் அமர்ந்து ஆட்சி புரிவது மட்டுமல்ல நமது நோக்கம். தமிழ் மக்கள் தமிழ் மரபைப் புரிந்து கொண்டு - தமிழர் வரலாற்றைப் புரிந்து கொண்டு - புதிய வரலாற்றை உருவாக்கப் பாடுபடும் திறத்துடன் தமிழர் பெருமையை உலகுக்கு உணர்த்திட வேண்டும் என்பதற்காகத் தான் நாம் பணியாற்றுகிறோம். தமிழ் இனம் - தமிழ் மொழி - தமிழ் மரபு இவைகளைக் காப்பாற்றும் புதிய அரசு தோன்ற வேண்டும்”** என்றார். அத்தகைய அரசை நடத்தினார் பேரறிஞர் அண்ணா. அத்தகைய அரசை நடத்தினார் தமிழினத் தலைவர் கலைஞர். அத்தகைய அரசை நடத்திக் கொண்டு இருக்கிறார் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இத்தகைய அரசைக் காப்பது தமிழினத்தைக் காப்பது ஆகும். தமிழ் மொழியைக் காப்பது ஆகும். தமிழ்நாட்டைக் காப்பது ஆகும்.

இந்தி - சமஸ்கிருதத் திணிப்புக்கு எதிராகத் தோள் தட்டி தமிழைக் காக்கும் அரணாக நிற்கிறது தி.மு.க. தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள ‘தொகுதிவரையறைச் சிதைவுக்கு’ எதிராகப் போராடி இந்த மாநிலத்தைக் காக்கும் அரணாக நிற்கிறது தி.மு.க. ஆரிய மேலாண்மைக்கு எதிராக - வேதியர் சூழ்ச்சிக்கு மயங்காமல் தமிழினத்தைக் காக்கும் அரணாக நிற்கிறது தி.மு.க. இத்தகைய தி.மு.க.வைக் காக்க வேண்டியது **தமிழ்நாட்டு மக்களின் கடமை ஆகும். எனவே தான், ‘மண், மொழி, மானம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைவீர்’** என்று அழைப்பு விடுக்கிறோம்.

‘நமக்குக் கிடைத்த கொடை அண்ணா’ என்றார் தந்தைப் பெரியார். ‘நமக்குக் கிடைத்த வாய்ப்பு கலைஞர்’ என்றார் தந்தை பெரியார். ‘எனக்குப் பின்னால், பேராசிரியருக்குப் பின்னால் யார் என்று கேட்டால் அதற்கான அடையாளம் தான் இந்த மேடையில் இருக்கும் ஸ்டாலின்’ என்றார் தமிழினத் தலைவர் கலைஞர்.

பேரறிஞர் அண்ணா - தமிழினத் தலைவர் கலைஞர் - திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் ஆகிய மூன்றின் தொடர்ச்சி என்பது தமிழ்நாட்டைக் காக்கும் அரண்கள் ஆகும். நாட்டுக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டினார் அண்ணா. மொழிக்கு ‘செம்மொழி’ என்ற தகுதியைத் தந்தார் கலைஞர். தமிழினத்தை அனைத்திலும் (கல்வி - மருத்துவம் - தொழில் - சமூகக் குறியீடுகள் - விளிம்பு நிலை மக்களின் மேம்பாடு) முன்னேற்றிக் காட்டி வருகிறார் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இந்த மூன்று முகங்கள் தான் தமிழ்நாட்டை வளர்த்தெடுத்த - வளர்த்துக் கொண்டிருக்கும் மூன்று முகம் ஆகும். எனவே தான், **‘மண், மொழி, மானம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைவீர்’** என்று அழைப்பு விடுக்கிறோம்.

“நான் செய்தவைகளில் கை வைக்க பயப்படும் வரை இந்த நாட்டை அண்ணாதுரை தான் ஆள்கிறான்” என்று சட்டமன்றத்தில் சொன்னார் பேரறிஞர் அண்ணா. “இந்தக் கருணாநிதியோடு அனைத்தும் முடிந்துவிடாது. ஆயிரமாயிரம் கருணாநிதிகள் வந்து கொண்டே இருப்பார்கள்” என்றார் தமிழினத் தலைவர் கலைஞர். இவர்கள் இருவரோடு அனைத்தும் முடிந்துவிடும் என்று நினைத்தார்கள் எதிரிகள். இவர்கள் இருவரது விதைத்த விதைகள் வீரியமானவை என்பதன் அடையாளம் தான் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இன்னுமொரு அரை நூற்றாண்டு காலத்துக்குத் தேவையான வீரியத்தை விதைத்து விட்டார் இன்றைய முதலமைச்சர் அவர்கள். எனவே தான், **‘மண், மொழி, மானம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைவீர்’** என்று அழைப்பு விடுக்கிறோம்.

ஒரு கட்சியில் இணைவீர் என்பது போன்ற சாதாரணக் கோரிக்கை அல்ல இது. ஒரு பாதுகாப்பு அரணைக் காப்பீர், அரணுக்குத் துணை நிற்பீர் என்பதற்கான கோரிக்கை இது. இன்றைய காலத்தின் - எதிர்காலத்தின் தேவை தி.மு.க. தமிழ்நாட்டைக் காப்பது தி.மு.க. அத்தகைய தி.மு.க.வைக் காப்பது தமிழ்நாட்டு மக்களின் கடமை.

**‘நன்றி என்பது பலனடைந்தோர் காட்ட வேண்டிய பண்பு’** என்கிறார் தந்தை பெரியார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.6.2025) அவரது இல்லத்தில், துறைமுகம் பகுதிக் கழகப் பிரதிநிதி டி.கே.சங்கர் – திருமதி அனுசுயா தம்பதியரின் மகன் டி.கே.எஸ். சூர்யா மற்றும் கிழக்கு மாவட்டக் கழகப் பிரதிநிதி காந்தியின் சகோதரர் எம். கார்த்திகேயன் – திருமதி கலைவாணி தம்பதியரின் மகள் எம்.கே. நிலா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் இ,பரந்தாமன், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும், சென்னை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவருமான கே.எஸ். இரவிச்சந்திரன், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.6.2025) முகாம் அலுவலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி மத்திய ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மு.முக்கேஷ் – ஷாமினி இணையரின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராஜன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், ப.அப்துல்மாலிக் உள்பட மணமக்களின் குடும்பத்தினர், தொ.மு.சங்க நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் உடனிருந்தனர்.

### ‘மக்களவையில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தில் மாற்றம் இருக்காது’ என்று

# ஒன்றிய உள்துறை அமைச்சர் உத்தரவாதம் தருவாரா?

## தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

சென்னை, ஜுன் 10-

மக்களவையில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவ விகிதம் 7.18 சதவீதத்தில் எந்த மாற்றமும் இருக்காது என்ற உத்தரவாதத்தை சட்டப்படி அளிக்க உள்துறை அமைச்சர் அமித்ஷா தயாரா? என்று மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் 84ன் படி 2026க்கு பின் மேற்கொள்ளப்படும் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுவரையறையை மேற்கொண்டாக வேண்டும். அதை மனதில் வைத்தே மக்கள் தொகை கணக்கெடுப்பைக் காலம் தாழ்த்தி வந்து தற்போது 2027இல் மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த சதியை முதலமைச்சர் அவர்கள் ஆரம்பம் முதலே எதிர்த்து வருகிறார். நியாயமான தொகுதி மறுவரையறை மேற்கொள்ளப்பட வேண்டும் என இதனால் பாதிக்கப்போகும் மாநிலங்களின் முதல்வர்கள், தலைவர்களை ஓரணியில் அணி திரட்டி எதிர்ப்பைப் பதிவு செய்தார்.



அப்போதெல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் வீண் பதற்றத்தை உண்டாக்குகிறார் எனக் கூறி வந்தவர்களின் குட்டு இப்போது மக்கள் முன் அம்பலப்பட்டு கிடக்கிறது. இதோ நம் வீட்டு வாசல் வரை வந்து விட்டது அந்த ஆபத்து.

இப்போது ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா என்ன சொல்ல போகிறார். தமிழ்நாட்டின் எம்.பி. தொகுதிகளின் எண்ணிக்கை குறையாது என்ற ஏமாற்று வார்த்தைகள் எங்களுக்கு வேண்டாம். மக்களவையில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவ விகிதம் 7.18 சதவீதத்தில் எந்த மாற்றமும் இருக்காது என்ற உத்தரவாதத்தை சட்டப்படி அளிக்க உள்துறை அமைச்சர் அமித்ஷா தயாரா? பதில் சொல்லுங்கள் அமித்ஷா அவர்களே!

இவ்வாறு தயாநிதி மாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவெறும்பூர் அருகே உள்ள எறும்பீஸ்வரர் ஆலயத்தில் வைகாசி விசாக திருவிழாவை முன்னிட்டு திருத்தேர் விழாவானது ஐந்து வருடங்களுக்கு பிறகு வெகு விமர்சையாக நடைபெற்றது. அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தேரோட்டத்தை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் 3வது மண்டல தலைவர் மு.மதிவாணன், மாமன்ற உறுப்பினர் சிவக்குமார், எறும்பீஸ்வரர் அறங்காவலர் குழு தலைவர் பழனியப்பன், ஆலய செயல் அலுவலர் வித்யா, அறங்காவலர்கள் பன்னீர்செல்வம், அமுதா மாரியப்பன், நல்லேந்திரன், கருணாகரன் உட்பட அருகே உள்ள கிராம பகுதிகளைச் சேர்ந்த கிராம பொதுமக்கள் மற்றும் சிவனடியார்கள், பக்த கோடிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டு திருத்தேர் வடம் பிடித்து தேரை இழுத்தனர். மேலும் இந்த திருத்தேர் விழாவில் சுமார் 500 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.